# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **வறுமை**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# வறுமை

**முன்னுரை**

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யாத அளவிற்கு சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகள் வறுமை.

**"வறுமை என்பது வன்முறையின் மோசமான வடிவங்களுள் ஒன்றாகும் - மகாத்மா காந்தி"**

**வறுமையின் வகைகள் மற்றும் வறுமைக்கோடு:**

1. முழு வறுமை
2. ஒப்பீட்டு வறுமை

**முழு வறுமை:-**

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் வாழும் சூழல் தலைக் கணக்கு விகிதம் என்றும் அழைக்கப்படும். இந்தியாவின் மொத்த மக்கள் தொகை விகிதத்தில், வறுமையில் வாடும் ஏழை மக்களின் எண்ணிக்கை 29.5 % ஆகும்.

**ஒப்பீட்டு வறுமை:-**

1. வருமான ஏற்றத்தாழ்வுகளை கணக்கிடுகிறது. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் காட்டுகிறது.
2. அதிக வருமானம் ஈட்டக்கூடிய 5% முதல் 10% மக்களோடு, குறைந்த வருமானம் ஈட்டக்கூடிய 5% முதல் 10% மக்களை ஒப்பீட்டு பார்ப்பது ஒப்பீட்டு வறுமை எனப்படும்.

ஒரு மனிதனின் வருமானம் / நுகர்வு வறுமை கோட்டிற்கு மேல் இருக்கும்

**தற்காலிக வறுமை (அ) முற்றிய வறுமை:**

1. இந்தியா போன்ற நாடுகளில் பருவமழை குறையும்போது, விவசாயம் பொய்த்து, அதனால் உழவர்கள் தற்காலிகமான ஏழ்மைநிலையில் உழல்கிறார்கள்.
2. அதே நிலையில் அவர்கள் நீண்டகாலமாக வாழும்போது அந்நிலையை முற்றிய வறுமை (அ) அமைப்பு சார்ந்த வறுமை என அழைக்கப்படுகிறது.

**முதல்நிலை வறுமை மற்றும் இரண்டாம் நிலை வறுமை:**

1. ரவுண்டிரி என்பவர் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை வறுமைகளுக்கு இடையே உள்ள வேற்றுமைகளை விளக்கினார்.
2. அவரது கூற்றுப்படி முதல்நிலை வறுமை என்பது "குடும்பங்களில் வாழ்க்கை நடத்த மொத்த சம்பாத்தியங்களைக் கொண்டு குறைந்தபட்ச, அத்தியாவசிய பொருள்களைக் கூட வாங்க முடியாத பற்றாக்குறையான நிலையைக் குறிக்கும்".
3. இரண்டாம் நிலை வறுமை என்பது குடும்பங்களின் சம்பாத்தியம், வாழ்க்கை நடத்த போதுமானதாக இருக்கும். ஆனால் அதன் ஒரு பகுதியானது உபயோகமான (அ) உபயோகமற்ற செலவுகளுக்கான மற்றும் திறமையற்ற குடும்ப நிர்வாகம் போன்றவைகள் வீணாண செலவுகளுள் சிலவாகும்.

**கிராமப்புற ஏழ்மை மற்றும் நகர்புற ஏழ்மை**

1. கிராமங்களில் வாழும் பெரும்பான்மையான ஏழை மக்கள் நிலங்களை சொந்தமாக பெற்றிராமல், விவசாய தினக் கூலிகளாகவே வேலை செய்கிறார்கள்.
2. அவர்கள் கூலியும் மிகக் குறைவே, ஆண்டில் ஒரு சில மாதங்களே அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள்.
3. ஆனால் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்கள் நீண்ட நேரம் உழைத்து, மிகக் குறைவான வருமானத்தையே பெறுகிறார்கள்.
4. பெரும்பாலானோர், அங்கீகாரம் பெறாத மற்றும் ஒழுங்குமுறைப்படி அமையாத துறைகளிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்.
5. இவர்கள் உப துணை வேலையாட்கள் எனப்படுவர். உபவேலையாட்கள் எனப்படுபவர்கள் மூன்று பிரிவைச் சேர்ந்தவர்கள்.
   - முழுநேர வேலை செய்ய விருப்பம் இருந்தும், பகுதி நேர வேலையையே செய்பவர்கள்.
   - குடும்பத் தலைவர், முழுநேர வேலை செய்தும், வறுமை கோட்டிற்கு மேல் தங்களுடைய குடும்பத்தை கொண்டுவரும் அளவிற்கு போதுமான வருமானம் ஈட்டவில்லை.
   - சோர்வுற்ற பணியாட்கள், வேலை தேடிச் செல்லாதவர்கள்.

**காரணங்கள்:-**

**சமூகம்:-**

1. கல்வியறிவின்மை
2. வேலையின்மை
3. திறன் குறைவு
4. மக்கள் தொகை அதிகம்
5. உயர்வான வாழ்க்கைத் தரம்
6. மதம் மற்றும் சமூகம் சார்ந்த மேலாண்மை
7. தன்னிறைவு அணுகுமுறையில் சமரசம் அடைதல்.

**பொருளாதாரக் காரணங்கள்:-**

1. பணவீக்கம்
2. பொருளாதாரத்தில் குறைந்த உள்ளடக்கிய வளர்ச்சி
3. செல்வங்கள் சமமற்ற நிலையில் பங்கிடுதல்
4. உற்பத்திதிறன் குறைவு
5. முதன்மைத் துறையில் கலாச்சார முக்கியத்துவம்

**வறுமைக்கோடு:-**

1. பொருளாதார அளவுகோல்
2. அரசாங்கம் தனிநபர் (அ) வீடுகள் சார்ந்த பொருளாதார குறைகளை சுட்டிக்காட்டவும், அவர்களின் தேவையை பூர்த்தி செய்யவும், பொருளாதாரத்தின் முக்கிய ஆரம்பகட்டமாக அமைவது வறுமையாகும்.
3. வெவ்வேறு அளவுகளை வைத்து உறுதிப்படுத்துகின்றது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் (அ) மாநிலத்திற்குள்ளேயும் வேறுபடும்.
4. பத்தாண்டை அடிப்படையாக வைத்து வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களை மத்தியஅரசு கணக்கெடுக்கின்றது.
5. உலக வங்கியின் கணக்குப்படி 1.25 டாலருக்கு குறைவான வருமானமுடையவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாக கருதப்படுகின்றனர்.
6. இந்தியாவில் திட்டக் குழுவால் கணக்கிடப்படுகிறது.
7. திட்டக்குழுவின் கணக்கீடு NSSOவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது.
8. ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயிக்கப்படுகிறது.

**ஐந்தாண்டு திட்டங்களில் வறுமைக் கணக்கீடு:-**

1. 1951-1956 (Ist) விவசாய முறையை முன்னேற்றி உணவுப் பற்றாக்குறையைத் தீர்த்தல்.
2. 1971-74 (4th) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், விலைமதிப்பைக் குறைத்தல்.
3. 1974-79 (5th) வறுமையை ஒழித்தல் (கரிபி ஹட்டாவோ)
4. 1985-90 (7th) (i) வறுமையை ஒழித்தல் (ii) உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்தல்.
5. 2002-2007 (10th) தலா வருமானத்தை இரட்டிப்பாக்குதல்.

**வறுமையை ஒழிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள்:**

சுதந்திரத்திற்குப் பின்பு பல வறுமை ஒழிப்புத் திட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

**கிராமப்புற வறுமை:-**

1. விரைவான மக்கள்தொகை வளர்ச்சி
2. மூலதனத்தில் பற்றாக்குறை விவசாயத்தைத் தவிர வேறு மாற்று வேலை வாய்ப்பின்மை.
3. விவசாயத்தின் மீதான மக்கள் தொகை அழுத்தம்
4. கல்வி
5. கூட்டுக் குடும்பம்
6. இளவயது திருமணம்
7. பிராந்திய வேறுபாடுகள்
8. முதலீட்டில் அலட்சியம்
9. பொது விநியோக முறையை முறையாக செயல்படுத்துவதில் குறைபாடு

**அரசு நடவடிக்கைகள்:-**

- 1986 - கொத்தடிமை தொழிலாளர் தடைச்சட்டம்
- 2000 - அன்த்தோதயா அன்னா யோஜனா
- 1974-75 - (SFDP) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்
- 1977-78 - வறட்சி பாதிக்கப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டம்
- 1975 - 20 அம்ச திட்டம்

- 1977-78 - வேலைக்கு உணவு திட்டம்
- 1980 - ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டம் ((IRDP)
- 1980 – NREP (தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்)
  - RLEGP (கிராமப்புற தொழிலாளர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்)
  - ஜவகர் கிராம சம்ரிதி யோஜனா
- 1979 - TRYSEM (கிராமப்புற இளைஞர் பயிற்சித் திட்டம்)
- 1982 - DWCRA கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்
- 1999 - பொன்விழா ஆண்டு ஊரக மேம்பாட்டுத் திட்டம்
- 1993 - மகிளா சம்ரிதி யோஜனா
- 1993 - வேலை வாய்ப்புத் திட்டம்
- 1995 - தேசிய சமூக உதவித் திட்டம் (NSDP)
- 2000 - பிரதம மந்திரி கிராமோதய திட்டம்
- 1985 - இந்திரா வீடு வழங்கும் திட்டம்
- 2006 - தேசிய ஊரக வேலை வாய்ப்புத் உறுதித் திட்டம்
- 2009 - மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்

**நகர வறுமை:-**

**காரணங்கள்:-**

1. கிராமப்புற இளைஞர்கள் நகரத்தை நோக்கி இடம் பெயர்தல்.
2. தொழிற்சார்ந்த கல்வி, தொழிற்ப் பயிற்சி இல்லாமை.
3. நகரங்களில் வரையறுக்கப்பட்ட (அ) நிர்ணயிக்கப்பட்ட வேலை வாய்ப்புகள்.
4. அதிவேக மக்கள் தொகை வளர்ச்சி
5. வீட்டுவசதி குறைவு
6. பொது மக்களுக்கான திட்டங்களை முறையாக செயல்படுத்தாமை

**அரசு நடவடிக்கைகள்:-**

1. தொழிற்கல்விக்கான முக்கியத்துவம்.
2. 1989 - நேரு ரோஜ்கர் யோஜனா (நேரு வேலை வாய்ப்புத் திட்டம்)
3. 1986 - SEPUP( நகர்ப்புற ஏழைகளுக்கு சுய வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்.
4. வீடு கட்டுவதற்கு நிதியுதவி

5. 1983- நகர்ப்புறத்தில் படித்த இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்.
6. 1995 - தேசிய சமூக உதவித் திட்டம்
7. நகர்ப்புறத்தில் உள்ள ஏழைகளுக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல்.
8. 1992 - பொன்விழா ஆண்டு வேலை வாய்ப்புத் திட்டம்.
9. பிரதம மந்திரி வேலை வாய்ப்புத் திட்டம்
10. பிரதம மந்திரியின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்.(PMIUPEP)

**தகவல் சேகரித்தல்:-**

கிராமப்புற ஏழைகள் பல விதமான இடையூறுகளை சந்திக்கின்றனர். இவர் ஒரே விதமான குழுக்களாக வாழ்வதில்லை. ஏழை மக்கள் தொடர்ச்சியாக சந்திக்கும் பிரச்சனைகள் குறித்த தகவல்களை நீண்ட நெடிய முயற்சி மேற்கொண்டு திரட்டுவதன் மூலம் ஏழைகள் போதுமான அளவிற்கு உற்றுநோக்கப்படுகிறார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

**அசையா சொத்துகள் மீது கவனம்:-**

எவ்வகையான சொத்துகள் ஏழைகளுக்கு போதிய வருமானம் ஈட்டித் தரக் கூடியதாக உள்ளது என்பதை அறிய அரசாங்கம் அதற்குண்டான முயற்சியில் ஈடுபட வேண்டும். அது விவசாய நிலம் (அ) பிற வளங்களாகவும் இருக்கலாம்.

பணியாளர்களை முற்றிலும் சார்ந்து இருத்தல், கட்டிட வசதி போன்ற பிற அசையா சொத்துக்களை சார்ந்திருத்தல் ஆகியவை வறுமைக்கான மூல முதல் காரணமாகும்.

**போதுமான நிலம் மற்றும் நீர் வசதியைப் பெறும் உரிமை:-**

1. பரந்து விரிந்த நிலச் சீர்திருத்த திட்டம், (நிலத்திற்கு பெயரிடல், நில மறு விநியோகம், நியாயமான வரையறுக்கப்பட்ட குத்தகைத் தொகை) போன்றவை வறுமையை ஒழிப்பதற்கான ஆதாரமாக அமையும். நில உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள், அதிக உற்பத்தியாளர்களாகவும், வாழ்க்கை தரத்தை உயர்த்தும் அளவிற்கும் வாழ்கின்றனர்.
2. சிறிய நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இதன் மூலம் உருவாகிறார்கள். அவர்கள் சிறந்த உற்பத்தியாளர்களாக மாறுவதால் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

**அடிப்படை சுகாதாரம் மற்றும் கல்வி:-**

கிராமப்புற ஏழைகள் தங்களின் மனித முதலீட்டை கட்டமைத்துக் கொள்வதனுடன் அதனை வலுவாக்கி கொள்ள வேண்டும். இதன்மூலம் அவர்களின் வறுமையை முற்றிலும் ஒழிப்பதுடன் சமூகத்திற்கு தங்களின் பொருளாதார பங்களிப்பை நல்க முடியும்.

**அடிப்படை சுகாதார வசதிகள்:-**

1. நோய் தடை காப்பு
2. சுகாதாரமான குடிநீர் வழங்கள்
3. குடும்பக் கட்டுப்பாடு

**கல்வி:-**

1. எழுத்தறிவு
2. பள்ளிகள்
3. தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சி

இத்திட்டங்கள் அனைத்தும் குறிப்பாக பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்.

**பிராந்திய ஈடுபாடு:-**

உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் ஆகிய திட்ட அம்சங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், பொறுப்புணர்வு கொள்ளுதல் குறித்த முடிவுகளை எடுப்பதில் பாதிக்கப்பட்ட பிராந்திய மக்களுக்கு முழுமையான அதிகாரம், நிதி, ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

**உள்கட்டமைப்பு வழங்குதல்:-**

கிராமப்புற ஏழை மக்கள் தங்கள் மனித வளத்தை முறையாக பயன்படுத்தவில்லை. நாட்டின் உட்கட்ட அமைப்பு வசதிகளான நீர்ப்பாசனம், போக்குவரத்து. தொலை தொடர்பு வசதிகள் எண்ணிக்கை அளவிலும் தரத்திலும் மிகவும் பின்தங்கி உள்ளதால் அவைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

**கடன் இலக்கு:-**

நம் நாட்டைப் பொறுத்தவரை முறை சார்ந்த, முறை சாரா கடன் வசதிகளை ஏழை மக்கள் பெறுவது கடினமாகவும், செலவு மிகுந்ததாகவும் உள்ளது. ஏழைகளை இலக்காகக் கொண்டு வழங்கப்படும் கிராமப்புற கடன் வழங்குத் திட்டத்தின் மானியங்கள் உட்பட பிற பலன்களை ஏழை மக்களை விட ஏழைகள் அல்லாதவரே அதிகம் பெறுகின்றனர்.


**பரவலாக்கப்பட்ட உணவுத் திட்டங்கள்:-**

கிராமப்புற மக்கள் பல நேரங்களில் சரியான ஊட்டச்சத்து இல்லாத உணவையே உட்கொள்கின்றனர். ஏழை மக்கள் சூழ்நிலைக்கு தகுந்த ஆதரவினை பெற விரும்புகின்றனர். எனவே உணவினை பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள். சமுதாய மையங்கள் மூலமாக வழங்க முற்பட வேண்டும்.

**லாரன்ஸ் வளைவு:-**

1. லாரன்ஸ் வளைவு என்பது செல்வ வள பகிர்வு குறித்த வரைபட விளக்க கோட்பாடு ஆகும். இக் கோட்பாடு அமெரிக்க பொருளாதார அறிஞர் மேக்ஸ் லாரன்ஸ் என்பவரால் 1905-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
2. இதில் நேராக வரையப்பட்ட கோடானது சமமான செல்வ பகிர்வினை விளக்குகின்றது.
3. நேரான கோட்டிற்க்கும், வளைவான கோட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடு சமமற்ற செல்வ பரவலை விளக்குகின்றது.

**வறுமையின் சுழற்சிகள்:-**




சுகாதாரமற்ற சுற்றுப்புறச் சூழல் ←

**வறுமை குறித்த கணக்கீடு:-**

**ரங்கராஜன் மற்றும் சுரேஷ் டெண்டுல்கர் குழு:-**

1. இந்திய அரசாங்கத்திற்கு வறுமை என்பது பிரச்சைக்குரிய ஒன்றாகவே உள்ளது.
2. ஏழை மக்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அவர்களின் தனிநபர் செலவினம் குறித்த சரியான தகவல்களைப் பெற பல்வேறு கணக்கீடு முறைகள் அரசாங்கத்தால் முயற்சிக்கப்படுகிறது.
3. 2005 ற்கு முன்பு இந்திய அரசாங்கத்தின் வறுமை குறித்த கணக்கீடானது உணவு பாதுகாப்பிற்காக கணக்கிடப்பட்டது. உயிர் வாழ தேவையான கலோரிகளை பெறுவதற்காக நுகர்வு செய்யும் தனிநபர் செலவினங்களைக் கொண்டு வறுமையின் அளவு நிர்ணயிக்கப்பட்டது.
4. 2005 ல் இருந்து இந்திய அரசாங்கம், டெண்டுல்கர் பரிந்துரைப்பின்படி கலோரியை கணக்கிடாமல் நுகரும் உணவு அளவை வைத்து, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வறுமையின் அளவுகோலை நிர்ணயித்தது.
5. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முதல் NSSO-ஆல் திரட்டப்பட்ட நுகர்வோர் செலவீனம் குறித்த தகவல்களை அடிப்படையாக கொண்டு தேசிய - மாநில அளவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கையானது திட்டக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டது.

**குழுக்கள்:-**

- 1977 - அலேக் குழு
- 1989 - லக்டவாலா குழு
- 2005 -டெண்டுல்கர் குழு
  - சக்சேனா குழு
  - ஹசிம் குழு
- 2012 - ரங்கராஜன் குழு

**ரங்கராஜன் கமிட்டியின் பரிந்துறைகள்:-**

- ரங்கராஜன் கமிட்டி அமைக்கபட்டது -2012
- அறிக்கை சமர்ப்பித்தல் - 2014

1. ரங்கராஜன் தலைமையிலான 5 பேர் கொண்ட கமிட்டி வறுமையை அளவிடும் முறை குறித்து சீராய்வு செய்ய அமைக்கப்பட்டது.
2. இது இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) மூலம் இந்தியக் குடும்பங்களில் நடத்தப்பட்ட சுதந்திரமான ஆய்வாகும்.
3. திட்ட குழு கிராமப்புறங்களில் ஏழை மக்களுக்கான ஒரு நாளைய செலவினத் தொகையாக ரூ. 22 ஐ நிர்ணயித்ததால் தேசிய அளவில் எழுந்த எதிர்ப்புகளின் காரணமாக இக்குழு அமைக்கப்பட்டது.
4. இக்குழு பல்வேறு வயது மற்றும் பாலினங்களை சேர்ந்தவர்களிடையே ICMR விதிகளின்படி அவர்களுக்கு சராசரியாக தேவைப்படும் கலோரிகள், புரதம், கொழுப்பு போன்றவற்றின் தேவையையும் கண்காணித்தது.
5. ரங்கராஜன் குழுவின் மதிப்பீட்டின் படி ஏழை மக்களின் எண்ணிக்கை டெண்டுல்கர் கமிட்டி நிர்ணயித்ததைவிட கிராமப்புறங்களில் 19% அதிகமாகவும், நகர்புறங்களில் 41% மேலும் அதிகமாக இருந்தது.

**தமிழ் நாட்டின் வறுமை ஒழிப்பு திட்டங்கள்:**

**தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத் திட்டம் (TNSRLM)**

ஊரகப்பகுதி மக்களின் வருமானத்தை உயர்த்துவதன் மூலம் கிராமப்புறங்களில்

1. வறுமையை ஒழிக்க இத்திட்டம் தொடங்கப்பட்டது.
2. நாகப்பட்டினம், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள 266 பஞ்சாயத்துகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
3. மத்திய அரசும், மாநில அரசும், இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.
4. ஊரகப்புற மக்களுக்கு சிறப்பான அடிப்படை வாழ்வாதார கட்டமைப்புகளை உருவாக்கி கொடுப்பதன் மூலமும், போதிய நிதி உதவி அளிப்பதன் மூலமும், அவர்களுக்கு நிலையான வருமானத்திற்கான வாய்ப்புகளையும், வாழ்வாதார மேம்பாட்டையும் அளிக்க இயலும்.
5. இத்திட்டத்தின் மூலம் கிராம அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டது.

**புதுவாழ்வு திட்டம் 2005:-**

1. உலக வங்கியின் உதவியுடன், ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து துறை இணைந்து வறுமையை ஒழிக்கவும், அதிகாரத்தை மேம்படுத்தவும் தொடங்கப்பட்டது.
2. இத்திட்டம் சென்றடைய வேண்டிய இலக்காக நிர்ணயிக்கப்பட்டவர்கள் ஏழை மக்கள்,மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களை உள்ளடக்கிய சமூகத்தின் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகும்.

**வினாக்கள்**

1. வறுமை வரையறு. வறுமையின் வகைகள் மற்றும் வறுமைக்கோடு பற்றி குறிப்பு வரைக.
2. வறுமையை ஒழிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவை?
3. இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பற்றி குறிப்பு எழுதுக.